சம்பளதாரர்கள் மற்றும் சிறு வியாபாரிகள் 2019-20 (01-04-2019 to 31-03-2020) ஆம் நிதி ஆண்டிற்கான வருமான வரி ரிட்டன் தாக்கல் செய்வதற்கான குறிப்புகள் பின்வருமாறு. இந்த குறிப்புகள் என்னுடைய கட்சிக்காரர்களுக்கு மட்டுமே அன்றி வேறு யாருக்கும் இது அனுப்பப்படவில்லை.

1. சம்பளதாரர்கள், பென்ஷன்தாரர்கள் மற்றும் சிறு வியாபாரிகள் அவர்களுக்காக உருவாக்கப்பட்ட வருமான வரிப்படிவங்களை பூர்த்தி செய்து அதற்கான கால அவகாசத்திற்குள் தாக்கல் செய்ய வேண்டும். மேலும் வருட வருமானம் ரூ.50,00,000/- மற்றும் அதற்கு குறைவாக இருக்கும் பட்சத்தில் கீழ்கண்ட வருமான இனங்களை சேர்த்து ரிட்டன் தாக்கல் செய்ய வேண்டும்.
2. ஒரு குடியிருப்பு வீட்டில் இருந்து வரும் வருமானம் இந்த ரிட்டன் பாரத்தில் சேர்த்துக் கொள்ளலாம்.
3. குடியிருப்பு வீட்டில் இருந்து முன் வருட நஷ்டம் எடுத்து வரும் பொழுது அதற்கு தனி ரிட்டன் பாரம் பூர்த்தி செய்து தாக்கல் செய்ய வேண்டும்.
4. இதர இன வருமானங்கள் முறையே வங்கி வட்டி, டெபாசிட் வட்டி, இதர வட்டி, போஸ்ட் ஆபிஸ் வட்டி ஆகியவைகளை இந்த பாரங்களில் ஏற்றிக் கொள்ளலாம்.
5. மைனர்களின் வருமானங்கள் மேற்கண்ட ஷரத்துக்களுக்கு உட்பட்டு இருந்தால் அவைகளையும் இந்த பாரத்தில் இணைத்துக் கொள்ளலாம்.
6. மேற்கண்ட வருமான இனங்கள் தவிர கீழ்கண்ட ஷரத்துகளில் ஏதேனும் ஒன்று தங்களுக்கு பொருந்தும் பட்சத்தில், வருமான வரி ரிட்டன் தாக்கல் செய்வது கடமை ஆகிறது. இந்த பிரிவின் படி தாக்கல் செய்யும் வருமான வரி ரிட்டன், வருமானத் தொகை

வரியில்லாத் தொகையான ரூ.2,50,000/-க்கு கீழே இருந்தாலும் வருமானமே இல்லாமல் இருந்தாலும் வருமான வரி ரிட்டன் தாக்கல் செய்வது கட்டாய கடமையாக்கப்பட்டுள்ளது.

1. தாங்கள் வங்கிகளில் Current Account அதாவது நடப்பு கணக்குகள் வைத்திருந்து தங்கள் பெயரில் இருக்கும் அனைத்து Current Account களிலும் செலுத்திய மொத்த தொகை ரூபாய் ஒரு கோடியை தாண்டும் பட்சத்தில் தாங்கள் இந்த பிரிவின் கீழ் வருகிறீர்கள்.
2. ஒரு வருடத்திற்கான மொத்த மின் தொகை கட்டணம் ரூபாய் ஒரு லட்சத்தை தாண்டும் பட்சத்தில் கட்டாய வருமான வரி ரிட்டன் தாக்கல் செய்ய வேண்டும்.
3. மேற்படி வருடத்தில் வெளிநாட்டு பயணம் மேற்கொண்டு அதற்கான செலவு ரூபாய் இரண்டு லட்சத்தை தாண்டும் பட்சத்தில் தாங்கள் கண்டிப்பாக வருமான வரி ரிட்டன் தாக்கல் செய்ய வேண்டும்.

7. Non Resident மற்றும் Not Ordinarly Resident நபர்களும் ஒருசில ஷரத்துக்களை தாண்டும் பொழுது வரி ரிட்டன் கண்டிப்பாக தாக்கல் செய்ய வேண்டும்.

8. வெளிநாடுகளில் ஏதேனும் சொத்துக்கள் இருந்தாலும் மற்றும் வெளிநாட்டு வங்கி கணக்குகளை நிர்வகிப்பவர்களாக இருந்தாலும் சில ஷரத்துகளுக்கு உட்பட்டு வருமான வரி ரிட்டன் தாக்கல் செய்ய வேண்டும்.

9. மேலே கூறிய நபர்களும், பின்வரும் நபர்களும் மேலே கூறிய 2019-20 ஆம் நிதி வருடத்திற்கான வருமான வரி ரிட்டன் தாக்கல் செய்ய வேண்டிய கடைசி தேதி 30-11-2020.

10. வருமான வரி கட்டாய தணிக்கைக்கு உட்படாதவர்களும் ரிட்டன் தாக்கல் செய்ய வேண்டிய கடைசி தேதி 30-11-2020, ஒரு சில விலக்கு பெற்றவர்கள் தவிர.

11. **மேற்கூறிய தவணை தேதிக்கு பிறகு வரி ரிட்டன் தாக்கல் செய்யும் பட்சத்தில் கட்டாய கட்டணம் செலுத்தப்பட வேண்டும். 01-12-2020 முதல் 31-03-2021 வரை தாமதமாக ரிட்டன் தாக்கல் செய்பவர்கள் கட்டாய கட்டணமாக ரூ.1000/- செலுத்த வேண்டும். மேலும் தங்கள் மொத்த வருமானம் ரூபாய் ஐந்து லட்சத்தை தாண்டக் கூடாது.**

12. **ரூபாய் ஐந்து லட்சம் வருமானத்திற்கு மேல் வருட வருமானம் உள்ளவர்கள் தாமதமாக ரிட்டன்கள் தாக்கல் செய்யும் பட்சத்தில், 01-12-2020ல் இருந்து 31-12-2020 தேதிக்குள் தாக்கல் செய்தால் கட்டாய கட்டணம் ரூ.5000/- ஆகும். 01-01-2021ல் இருந்து 31-03-2021 வரை தாமதமாக தாக்கல் செய்யப்படும் ரிட்டன்களுக்கு கட்டாய கட்டணம் ரூ. 10000/-. இந்த கட்டணம் கண்டிப்பாக கட்டப்பட வேண்டும். எந்தவித தள்ளுபடியும் கோர முடியாது.**

13. 2019-20ம் வருடத்திற்கான வருமான வரி ரிட்டன்கள் தவணைத் தேதிக்குள்ளோ அல்லது தவணைத் தேதி கடந்தோ 31-03-2021 வரை ரிட்டன்கள் தாக்கல் செய்யலாம்.

14. சட்டப்படி 31-03-2021 தேதிக்குப் பிறகு மேற்கண்ட 2019-20ஆம் வருடத்திற்கான ரிட்டன்கள் தாக்கல் செய்ய முடியாது. ஆனால் ஒருசில ஷரத்துக்கள் தங்களுக்கு பொருந்தும் பட்சத்திலும் வருமான வரி ஆணையர் அல்லது நேர்முக வரி ஆணையம் தங்களுக்கு அளிக்கும் தனி அனுமதியின் பேரில் ரிட்டன்கள் தாக்கல் செய்யலாம்.

15. தாமதமாக தாக்கல் செய்யப்படும் ரிட்டன்களுக்கு மேற்கண்ட கட்டாய தொகை தவிர மற்ற வட்டி மற்றும் பெனல்டிகள் விதிக்க நேரிடலாம்.

16. சம்பளதாரர்கள் மற்றும் பென்ஷன்தாரர்களுக்கு Standard Deduction ரூபாய் ஐம்பதாயிரமாக உயர்த்தப்பட்டுள்ளது.
17. கம்பெனிகளில் Director களாக இருக்கும் பட்சத்தில் அவர்களும் மேற்கண்ட தேதிக்குள் ரிட்டன்கள் தாக்கல் செய்ய வேண்டும்.
18. சம்பளதாரர்கள் மேற்கண்ட வருடத்திற்கான Form-16 (Part-A மற்றும் Part-B கண்டிப்பாக இருக்க வேண்டும்). மற்றும் மாதாந்திர சம்பளப் பட்டியல் கொடுக்க வேண்டும்.
19. தாங்கள் எங்கு வேலை செய்கிறீர்கள், தங்கள் முதலாளியின் பெயர், விலாசம், PAN, TAN, மற்றும் தாங்கள் சார்ந்த துறை ஆகியவை முழுமையாக கொடுக்கப்பட வேண்டும். பென்ஷன்தாரர்கள் கடைசியாக வேலை பார்த்த முதலாளி பற்றிய விபரங்கள் தெரிவிக்க வேண்டும்.
20. வருமான வரித்துறையில் இருந்து ஏதேனும் நோட்டீஸ்கள் வந்திருந்து, அதன் பேரில் ரிட்டன்கள் தாக்கல் செய்யும் பட்சத்தில் அந்த நோட்டீஸ் காப்பிகள் எங்களுக்கு அனுப்பப்பட வேண்டும்.
21. National Pension Scheme Sec-80CCC, 80CCD (1), 80CCD (1B), 80-CCD (2) ஆகிய திட்டத்தில் செலுத்திய தொகைகளுக்கு தனி தள்ளுபடி உண்டு. இதற்கான டெபாசிட் ரசீது எங்களுக்கு அனுப்பப்பட வேண்டும்.
22. வழக்கமான தள்ளுபடிகளான 80-C, 80-D, 80-DD, 80-DDB, 80-E, 80-EE, 80-EEA, 80-EEB, 80-G, 80-GG, 80-GGC மற்றும் 80-U பிரிவுகளில் கோரப்படும் தள்ளுபடிகளுக்கு முறையான ரசீதுகள், சர்டிபிகேட்டுகள் எங்களுக்கு கொடுக்கப்பட வேண்டும்.
23. சம்பளதாரர் மற்றும் பென்ஷன்தாரர்கள் பொதுவாக அளிக்க வேண்டிய தகவல்கள் பின்வருமாறு.

முழு பெயர்

முழு விலாசம் பின்கோடுடன்

PAN

பிறந்த தேதி

மொபைல் போன் நம்பர்

மின்னஞ்சல் முகவரி

ஆதார் எண்

வேலையின் தன்மை (State Government or Central Government or PSU Employee etc.,)

வேலையில் இருந்த/இருக்கும் அலுவலகத்தின் முழு தகவல்கள் முறையே பெயர், விலாசம், PAN, TAN முதலியவை.

சம்பள விபரங்கள் அதாவது Form-16 மற்றும் மாதாந்திர சம்பளப் பட்டியல்.

வரி விலக்குகள் பெறும் Allowances கள் மற்றும் அவை சம்மந்தமான கணக்கீடுகள்.

வரி செலுத்தும் மற்றும் வரி விலக்கு பெறும் சலுகைகள் (Perquistes) மற்றும் அவை சம்மந்தமான கணக்கீடுகள்.

மொத்த சம்பளம், பிடித்தங்கள் மற்றும் நிகர சம்பளம்.

பிரிவு-16ன் கீழ் வரும் தள்ளுபடிகள் - Standard Deduction முதலானவை.

தாங்கள் பெறப்பட்ட Family Pension க்கான தொகை.

LIP கட்டிய ரசீது காப்பி.

Tution Fees கட்டிய ரசீது காப்பி.

வீட்டுக் கடன் திருப்பி செலுத்திய லோன் மூலத்தொகை மற்றும் வட்டி கணக்கீட்டு தொகைக்கான சர்டிபிகேட்டுகள்.

எல்லாவிதமான PF கட்டிய ரசீது காப்பிகள்.

NSC வாங்கி இருந்தால் அந்த சர்டிபிகேட் காப்பிகள்.

ULIP செலுத்தி இருந்தால் அதற்கான காப்பி.

Mutual Fund ல் செலுத்திய தொகைக்கான ரசீது.

வருமான வரி விலக்கு பெற வங்கியில் செலுத்திய Special Deposit ரசீது.

Medicliam Insurance Policy க்காக கட்டிய தொகைக்கான ரசீது.

National Pension Scheme ல் கட்டிய தொகைக்கான ரசீது.

தங்களுக்கோ தங்களை சார்ந்தவர்களுக்கோ செலவு செய்த மருத்துவ செலவு (அனுமதிக்கப்பட்ட இனங்கள் மட்டும்)க்கான ரசீதுகள் / டாக்டர் சீட்டுகள் மற்றும் சர்டிபிகேட்டுகள்.

80-G பிரிவின்படி செலுத்திய நன்கொடைக்கான ரசீது காப்பி.

80-EE பிரிவின்படி வீட்டுக் கடனுக்கான வட்டி சர்டிபிகேட்.

80-EEA பிரிவின்படி வீட்டுக் கடனுக்கான வட்டி சர்டிபிகேட்.

80-EEB பிரிவின்படி கோரும் தள்ளுபடிக்கான Electric வாகனம் வாங்கிய பில் காப்பி.

80-TTA பிரிவின்படி தள்ளுபடி கோரும் Savings Bank Interest Certificate.

80-TTB பிரிவின்படி தள்ளுபடி கோரும் வங்கி Fixed Deposit மற்றும் Post Office Deposit வட்டி சர்டிபிகேட்.

80-U பிரிவின்படி தள்ளுபடி கோரும் வரிதாரர்களுக்கான சர்டிபிகேட்.

மேற்கண்ட 2019-20க்கான அனைத்து வங்கி கணக்குகளின் காப்பிகள் அல்லது பாஸ் புத்தகங்கள் அனுப்பப்பட வேண்டும். கடந்த 3 ஆண்டுகளில் எந்தவித பற்று வரவு இல்லாமல் இருக்கும் வங்கி கணக்குகள் தேவையில்லை.

01-04-2020ல் இருந்து 30-06-2020 வரை 80-C பிரிவின் கீழ் செலுத்திய தொகைக்கான ரசீது காப்பிகள்.

24. Revised Return தாக்கல் செய்யும் பட்சத்தில், Original Return தாக்கல் செய்தற்கான ITR-V அனுப்ப வேண்டும்.

25. ஒரு குடியிருப்பு வீட்டில் இருந்து கிடைக்கும் வருமானம் பற்றிய விபரம்.

    1. வருட வாடகை பெற்றது மற்றும் வாடகைதாரர் பெயர் மற்றும் விலாசம் PAN நம்பருடன்.
    2. மேற்கண்ட வீட்டிற்கான முனிசிபல் அல்லது கார்பரேஷன் வரி கட்டிய ரசீது.
    3. மேற்கண்ட வீட்டிற்காக பெறப்பட்ட கடன் தொகைக்கான வட்டி சர்டிபிகேட்.
    4. வராத வாடகை சுமார் 30 சதவீதத்திற்கு குறைவாக இருப்பின்.

26. Form 26AS. பொதுவாக தங்கள் ரிட்டன் தயார் செய்து தாக்கல் செய்யும் ஆடிட்டர்களே இதை தரவிறக்கம் செய்து கொள்வார்கள்.

27. சிறு மற்றும் குறு வியாபாரிகளுக்கான விபரங்கள்.

    1. லாரி மற்றும் சரக்கு வாகனங்கள் இருந்தால் அவைகளின் Registration Number, சொந்தமானதா அல்லது வாடகைக்கு எடுத்ததா, வாகனத்தின் லோடு Capacity மற்றும் வாகனங்கள் எத்தனை மாதத்திற்கு உபயோகப்படுத்தப்பட்டது.
    2. Partnership Firm ஆக இருப்பின் கூட்டாளிகளுக்கு கொடுத்த சம்பளம் மற்றும் வட்டி. கூட்டாளிகளாக இருப்பின் Partnership Firm சம்பளம் மற்றும் வட்டி விபரங்கள்.
    3. GST பதிவு பெற்ற நபராக இருந்தால் GSTIN.
    4. GST ரிட்டன் படி இந்த வருடத்திற்கு தாக்கல் செய்த மொத்த விற்பனை மற்றும் சேவை தொகை விபரம்.
    5. லாப நஷ்ட கணக்கு காப்பிகள், குறிப்பு இருப்பு கணக்கு காப்பிகள், முதலீட்டு கணக்கு காப்பிகள் முதலியவை.

6. விவசாய வருமானம் இருப்பின், நிலம் பற்றிய விபரம், விவசாய மொத்த செலவு, விவசாய மொத்த வருமானம் மற்றும் விவசாய நிகர வருமானம்.
7. Advand Tax கட்டிய ரசீதுகள் காப்பி.

மேற்கண்ட விபரங்கள் தங்களுக்கான வருமான வரி ரிட்டன் பாரங்கள் ITR-I மற்றும் ITR-IV தயார் செய்து தாக்கல் செய்ய தேவைப்படும் தகவல்கள் ஆகும். இந்த விபரங்களை சரிபார்த்துக் கொள்ளவும் அல்லது மேலும் விபரங்களுக்கு இந்திய வருமான வரிச் சட்டம் 1961 மற்றும் அது சார்ந்த விதிகள் இவைகளை படித்து தெரிந்து கொள்ளலாம்.

COVID-19 காரணமாக தற்காலிகமாக எங்கள் அலுவலகம் அதன் விலாசத்தில் செயல்படவில்லை. ஆடிட்டர் மற்றும் அவர்தம் மேலாளர்கள் மற்றம் சிப்பந்திகள் வீட்டில் இருந்தே அலுவல்களை செய்து வருகின்றனர். இது சம்மந்தமான இரண்டு சர்குலர்கள் இத்துடன் இணைத்துள்ளேன். முடிந்தவரை எல்லாத் தகவல்களும் மெயில் மற்றும் வாட்ஸ்அப்பில் அனுப்பவும். தகவல்கள் அதிகமாக இருக்கும் பட்சத்தில் அவைகளை தபால் மூலம் அனுப்பவும். தபால் மூலம் அனுப்ப வேண்டிய முகவரியை ஆடிட்டரை தொலைபேசி மூலம் கேட்டு தெரிந்து கொள்ளவும்.

மேலே கூறிய தகவல்கள் பெரும்பான்மையானவை தாங்கள் அளிக்கும் Form-16 (Part A & Part B) ஆகியவைகளிலேயே இருக்கும். பிற்காலத்தில் தங்கள் கணக்குகள் Scrutiny க்கு வருமான வரித்துறையால் தேர்ந்தெடுக்கும் பட்சத்தில் அப்போது இந்த தகவல்களை பெறுவது மிகக் கடினம். ஆகவே இப்போதே மேலே கண்ட தகவல்களை சேர்த்து வைத்துக் கொள்வது நல்லது.

இது பற்றிய முழு விபரமும் என்னுடைய இணையத்தளம் www.infotaxx.com இதில் தெரிந்து கொள்ளவும். தொலைபேசியில் அழைப்பதை தவிர்த்து SMS மற்றும் வாட்ஸ்அப் & மெயில் போடவும். தங்களின் அனைத்து அழைப்புகளும் முறையாக கவனிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

இப்படிக்கு

**து.கண்ணுசாமி**
**பட்டயக் கணக்காளர்**
கடலூர் - 607 002.
செல் : 9443131888
வாட்ஸ்அப் : 6374345046
மெயில் : **dk@infotaxx.com, infotaxx@gmail.com, cdrinfotaxx@gmail.com**